# சென்னை மெட்ரோ ரயில்களில் ஜனவரியில் 13 லட்சம் பேர் பயணம்

■ சென்னை

சென்னை மெட்ரோ ரயில்களில் கடந்த ஜனவரி மாதத்தில் மட்டும் 13 லட்சத்து 43 ஆயிரம் பேர் பயணம் செய்துள்ளனர்.

இது தொடர்பாக மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கரோனா ஊரடங்கு தளர்வுக்குப் பிறகு கடந்த செப். 7 முதல் சென்னையில் மீண்டும் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்டது. அதன்படி, செப்டம்பர் மாதம் முதல் கடந்த மாதம் வரையில் 44 லட்சத்து 96 ஆயிரம் பேர் பயணம் செய்துள்ளனர்.

கடந்த மாதம் ஜனவரியில் மட்டும் 13 லட்சத்து 43 ஆயிரம் பேர் பயணம் செய்துள்ளனர். கடந்த மாதம் 27-ம் தேதியில் மட்டும் அதிகபட்சமாக 63,699 பேர் மெட்ரோ ரயிலில் பயணம் செய்துள்ளனர்.

க்யூஆர் குறியீடு பயணச்சீட்டு முறையில் ஒரு லட்சத்து 9 ஆயிரத்து 505 பேரும், பயண அட்டை பயணச்சீட்டு முறையில் 24 லட்சத்து 80 ஆயிரத்து 185 பேரும் பயணித்துள்ளனர். மேலும், மக்கள் கூட்ட நெரிசல் இன்றி பயணம் செய்யும் வகையில் மெட்ரோ ரயில் நிலையங்களில் இருக்கும் அனைத்து நுழைவாயில்களும், சுரங்கப்பாதைகள், மின்தூக்கிகள், நகரும் படிக்கட்டுகள் போன்ற அனைத்து வசதிகளும் மக்களின் பயன்பாட்டுக்கு திறக்கப்பட்டுள்ளன. இதேபோல், கரோனா பரவலை தடுக்கும் வகையில் தொடர்ந்து முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.